FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301636

1. District : மதுரை PS: தி.க.5 Year: 2026 FIR No.: 14/2026 Date: 23.09.26
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7, 7A of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: New BNSS Act Sections பிரிவுகள்: 106 BNSS

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 22.09.26 Date to : 23.09.26
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 19:00 மணி Time to : 00.30 மணி
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 23.09.26 Time : 15.30 மணி
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 23.09.26 Time : 16.15 மணி
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தீடீர்ச்சோதனை செய்யப்பட்டகார்
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: தென்கிழக்கு, 1/2 கி.மீ
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : தனியார் பொறியாளர் அலுவலகம்
முறைக் காவல் எண் முகவரி அருகில் அண்ணா மாளிகை, மதுரை, மாநகராட்சி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு.C.சுந்தரபாண்டியன் (b) Father's/ Husband's Name : செல்லையா
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 2ய.நி 53/2026 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : மாவட்ட தொழில் துணை இயக்க (தொ) அலுவலர் (g) Address : மாவட்ட இயக்குநர் அலுவலகம் பணிமனை கிராமோதயா அடுக்குமாடி அலுவலக வளாகம், மதுரை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. திரு. R. ராமசாமி 2ய.நி 59/2026, த/பெ. பிரங்கப்ப கவுண்டர், தனியார் பொறியாளர், அருகில் அண்ணா மாளிகை, மதுரை மாநகராட்சி பணிமனை [illegible] எனும் இவரை மற்றும் தனியாக [illegible]

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- சிறுமதுரை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Attached Separate Sheets Pages 3 to 11

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed K. Kumaragiru Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS. VPM Madurai on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

23.09.26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 23.09.26 17.10 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் T. Suriyakala
Rank: நிலை Inspector of Police
No. எண் VPM Madurai

குற்றவாளிகள் பெயர் விபரம் தொடர்ச்சி :

A-2	திரு.V.S.மணியன், வயது 57/2026 த/பெ.வைகுண்டம், உதவி செயற்பொறியாளர் (பொறுப்பு), தலைமைப் பொறியாளரின் நேர்முக உதவியாளர், அறிஞர் அண்ணா மாளிகை மதுரை மாநகராட்சி, மதுரை.
A-3	திரு.M.பாலமுருகன், வயது 57/2026 த/பெ.முனுசாமி, உதவி செயற்பொறியாளர், மண்டலம் - 5, திருப்பரங்குன்றம், மதுரை மாநகராட்சி, மதுரை.
A-4	திரு.K.மயிலேறிநாதன், வயது 59/2026 த/பெ.கருப்பன், உதவி செயற்பொறியாளர், (பாதாள சாக்கடை அமைக்கும் திட்டப்பணி), மதுரை மாநகராட்சி, மதுரை.
A-5	திரு.M.கோகுலன், வயது 30/2026 த/பெ.முருகன், உதவி பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப உதவியாளர், வார்டு -31, உதவிபொறியாளர் அலுவலகம், மண்டலம்-2, மதுரை மாநகராட்சி, மதுரை.
A-6	திரு.S.கார்த்திக், வயது 36/2026 த/பெ.சாத்தராஜன், இளநிலை பொறியாளர் அவர்களின் ஒப்பந்த பணியாளர், வார்டு -15, உதவிபொறியாளர் அலுவலகம், மண்டலம்-2, மதுரை மாநகராட்சி, மதுரை.
A-7	திரு.C.செல்வகுமார், வயது 36/2026 த/பெ.சின்னக்காளை, தொழில்நுட்ப உதவியாளர் (தற்காலிகம்) உதவி செயற்பொறியாளர் அலுவலகம், மண்டலம்-2, மதுரை மாநகராட்சி, மதுரை.
A-8	திரு.M.வினோத்மணி, வயது 34/2026 த/பெ.மெய்யசாமி, தேர்ச்சி திறனற்ற பணியாளர், துலைமைப் பொறியாளர் அலுவலகம், அறிஞர் அண்ணா மாளிகை, மதுரை மாநகராட்சி, மதுரை.
A-9	திரு.S.ஜெகதீஸ், வயது 30/2026 த/பெ.சுந்தரராஜன், தொழில்நுட்ப உதவியாளர் (தற்காலிகம்) தலைமைப் பொறியாளர் அலுவலகம், அறிஞர் அண்ணா மாளிகை, மதுரை மாநகராட்சி, மதுரை.

A-10	திரு.கணேஷ்பாண்டி, வயது 32/2026 த/பெ.சங்கர், அலுவலக உதவியாளர், தலைமைப் பொறியாளர் அலுவலகம், அறிஞர் அண்ணா மாளிகை, மதுரை மாநகராட்சி, மதுரை.
A-11	திரு.K.ராதா, வயது 62/2026 த/பெ.காளிமுத்து, ஒப்பந்ததாரர், 1/354, ராமசாமி நகர், புதுநத்தம் ரோடு, மதுரை-14.
A-12	திரு.R.கருப்பசாமி, வயது 43/2026 த/பெ.A.ராசு, ஒப்பந்ததாரர், சசி பில்டர்ஸ் 77, மீனாம்பிகை நகர் 9வது தெரு, ஜெய்ஹிந்த்புரம், மதுரை - 11.
A-13	திரு.A.ரமேஷ், வயது 32/2026 த/பெ.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், AR Constructions, 1/301, பரளிபுதூர், நத்தம், திண்டுக்கல் மாவட்டம்.
A-14	திரு.K.ராஜாராம், வயது 62/2026 த/பெ.கந்தசாமி, AMR Engineering & Construction Technology, 4/748-5, மகாலெட்சுமி நகர் 7வது தெரு, கண்ணனேந்தல், மதுரை - 625007

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
மதுரை. 23.09.26

Honoured Sir,

Submitted,

இன்று 23.09.2026-ம் தேதி மதியம் சுமார் 15.30 மணிக்கு, காவல் ஆய்வாளர் T.சூரியகலா ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.C.சுந்தரமுருகன் அவர்கள் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி என்னிடம் தனி அறிக்கை அளித்தார். மதுரை ஊ.த.க. பிரிவு, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், மேற்படி தனி அறிக்கை மற்றும் அத்துடன் ஒப்படைத்த மதுரை மாநகராட்சி தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள் : 23.09.2026, திடீர் இணை ஆய்வின் போது மேற்படி அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.1,35,000/-, கைப்பற்றப்பட்ட 3 பதிவேடுகள், சோதனையின் போது அலுவலகத்தில் இருந்த பத்து அலுவலர்கள் மற்றும் நான்கு ஒப்பந்ததாரர்கள் ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். தனி அறிக்கையில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர் C. சுந்தரமுருகன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், பழைய இராமநாதபுரம் ஆட்சியர் அலுவலகம், மதுரை. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. **ந.க.எண். 46/2026/I1, நாள் : 23.09.2026** அய்யா, பொருள்: மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை - மதுரை மாநகராட்சி - மதுரை மாநகராட்சி தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில், நேற்று ஒப்பந்தகாரர்களிடம் டெண்டர் சம்பந்தமாக லஞ்சம் பெறுவதாக கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பேரில், நேற்று 22.09.2026-ம் தேதி திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - ரூ.1,35,000/- பணம் கைப்பற்றப்பட்டது - தனி அறிக்கை அனுப்புதல் - மேல் நடவடிக்கை எடுக்க கோருதல் குறித்து. நேற்று 22.09.2026-ம் தேதியன்று, மதுரை மாநகர் அண்ணா மாளிகையில் இயங்கி வரும் மதுரை மாநகராட்சி தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில், ஒப்பந்தகாரர்களிடம் டெண்டர் சம்பந்தமாக லஞ்சம் பெறுவதாகக் கிடைத்த இரகசிய தகவல் கிடைத்திருப்பதாக மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. சூரியகலா என்னிடம் தெரிவித்தார். பின்பு, நான் அழைத்ததின் பேரில், காவல் ஆய்வாளர்கள் திருமதி. சூரியகலா, திரு.ரமேஷ்பிரபு மற்றும் அவர்களது போலீஸ் பார்ட்டியினருடன் இணைந்து நேற்று (22.09.2026) மாலை 06.00 மணிக்கு புறப்பட்டு, சுமார் 06.15 மணிக்கு மதுரை அம்பேத்கர் சாலையின் தெற்கே உள்ள மதுரை மாநகராட்சி, அண்ணா மாளிகை அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள கட்டிடத்தின் இரண்டாவது தளத்தின் தெற்கு கடைசியில் உள்ள மதுரை மாநகராட்சி தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று காண்காணித்ததில், மேறகூறியவாறு

கிடைத்த இரகசிய தகவலின்படி மதுரை மாநகராட்சி தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் ஒப்பந்ததாரர்கள் பலர் இருந்ததால், மேற்படி தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் 22.09.2026-ஆம் தேதி இரவு 19.00 மணிக்கு திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகமானது மேற்கு பார்த்த வாசல் கொண்டதாக உள்ளது. அதில் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தின் முன் புறத்தில், வடக்கே வரவேற்பறையும், அதனைத் தொடர்ந்து கணிப்பொறி அறையும், தெற்கே தலைமை பொறியாளரின் நேர்முக உதவியாளரின் அறையும் அமைந்துள்ளன. நுழைவாயிலின் எதிரில் மதுரை மாநகராட்சியின் தலைமைப் பொறியாளர் அறை உள்ளது. அந்த அறையின் வடக்கே ஒரு தனி அறையும், அதனைத் தொடர்ந்து ஒரு கலந்தாய்வு அறையும் உள்ளன. மேற்படி அலுவலகத்தில் ஆய்வு குழுவினர் நுழைந்தபோது தலைமைப் பொறியாளர் திரு.R.ராமசாமி அவரது அலுவலக அறையில் உள்ள இருக்கையில் வடக்கு நோக்கி அமர்ந்திருந்தார். அவருக்கு எதிரில் காலம் 5-ல் கண்ட மாநகராட்சி அலுவலர் திரு.மயிலேறிநாதன், உதவி செயற்பொறியாளர் (பொறுப்பு), மற்றும் ஒப்பந்ததாரர் திரு.ராஜாராம் ஆகியோர் பேசிக்கொண்டிருந்தனர். மேற்படி தலைமை பொறியாளர் திரு.ராமசாமி அவர்களிடம், மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர் ஆகிய நான், என்னையும், என்னுடன் வந்த ஊழல் தடுப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.சூரியகலா மற்றும் திரு.ரமேஷ் பிரபு மற்றும் ஊ.த.க. ஆளிநர்களை அறிமுகம் செய்து கொண்டு மேற்படி அலுவலகத்தை திடீர் இணை ஆய்வு செய்வதற்காக வந்த தகவல் அவரிடம் தெரிவித்து, அவரின் அனுமதி பெற்றேன். பின்னர் நான், மேற்படி திரு.மயிலேறிநாதன் அவர்களிடம் விசாரித்த போது, அவர் தலைமைப் பொறியாளர் அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் மாநில நெடுஞ்சாலை துறையில் கொடுக்கப்பட்ட சாலை சீரமைப்பு மதிப்பீடு கடிதத்தை மேற்படி திரு.ராமசாமி அவர்களிடம் கொடுத்துவிட்டு, அது சம்பந்தாக பேசிக்கொண்டிருந்ததாகத் தெரிவித்து, மேற்படி அறையில் இருந்த ஒப்பந்ததாரர் திரு.ராஜாராம் அவர்களை தனக்கு தெரியும் என்றும் அவர் மதுரை மாநகராட்சியில் பாதாள சாக்கடை, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பராமரிப்புப் பணி செய்யும் ஒப்பந்ததாரர் என்றும் என்னிடம் தெரிவித்தார். மேற்படி திரு.ராஜராம் அவர்களிடம் நான் விசாரித்த போது, அவர் மேற்படி பராமரிப்புப் பணி சம்பந்தமாக மேற்படி திரு.ராமசாமி அவர்களிடம் சந்தித்து பேசிக்கொண்டிருந்தாகத் தெரிவித்தார். அதனை தொடர்ந்து தலைமை பொறியாளர் அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. மேலும், திரு.ராமசாமி அவர்களிடம் பணம் ஏதும் உள்ளதா? என நான் கேட்டபோது, அவர் அவரது சட்டையின் இடது பக்க மேல் பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.200/- பணத்தை எடுத்து அவரது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக என தெரிவித்ததால் அப்பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும், அந்த அறையில் திரு.ராமசாமி அவர்களுக்கு எதிரே அமர்ந்து பேசிக்கொண்டிருந்த திரு.மயிலேறிநாதன் அவர்களிடம் சோதனையிட்ட போது அவரின் இடது பக்க பேண்ட்

பாக்கெட்டிலிருந்து ரூ.7,000/- மும், அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டிலிருந்த மணி பர்ஸிலிருந்து ரூ.1,340/-மும் எடுத்து என்னிடம் ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து நான் திரு.மயிலேறிநாதன் அவர்களிடம் விசாரித்த போது, அவர் அவரது மருத்துவச் செலவிற்காக அப்பணத்தை வைத்துள்ளதாகத் தெரிவித்தார். அவர் கூறிய முகாந்திரம் சரியாக இருந்ததால் அவருடைய பணம் ரூ.1,340/- அவரிடமே ஒப்படைத்தேன். அது போக அவர் வசம் மீதியிலிருந்த பணம் ரூ.7,000/-திற்கு (ரூ.500 X 14) சரியான முகாந்திரம் கூறாததால் அப்பணம் அப்பணத்தை நான் கைப்பற்றினேன். மேலும் மேற்படி அறையிலிருந்த திரு.ராஜாராம் அவர்களிடம், நான் பணம் பற்றி விசாரித்த போது, அவர் அவரது இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த மணி பர்ஸிலிருந்து ரூ.5,780/-மும் எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து நான் திரு.ராஜாராம் அவர்களிடம் விசாரித்த போது, அவர் அவரது சொந்த செலவிற்காக அப்பணத்தை வைத்துள்ளதாகத் தெரிவித்தார். அப்பணத்தில் ரூ.780/- அவர் சரியான முகாந்திரம் கூறியதால் அப்பணம் அவரிடமே ஒப்படைத்தேன். அது போக அவர் வசம் மீதியிலிருந்தப் பணம் ரூ.5,000/-க்கு (ரூ.500 X 8, ரூ.200 X 5) சரியான முகாந்திரம் கூறாததால், அப்பணத்தை நான் கைப்பற்றினேன். அதனைத் தொடர்ந்து தலைமைப் பொறியாளரின் நேர்முக உதவியாளர் திரு.மணியன் என்பவர் அவரது அறையில் வடக்கு நோக்கி அவர் அமர்ந்திருந்த இருக்கைக்கு எதிரில் அலுவலக மேசை, இடதுபுறம் உள்ள இரும்பு அலமாரி மற்றும் தரையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த மாநகராட்சி கோப்புகள் சோதனையிடப்பட்டன. மேலும், திரு.மணியன் அவர்களிடம், நான் விசாரித்த போது அவரிடம் பணம் ஏதும் இல்லை எனத் தெரிவித்தார். மேலும், அவரது இருக்கைக்கு கிழக்கு பக்கம் இருந்த திரு.ஈஸ்வரன் என்பவரிடம் நான் விசாரித்த போது அவர் மேற்படி மணியன் அவர்களிடம் தொழிற்நுட்ப உதவியாளராகப் (Out Sourcing) பணிபுரிந்து வருவதாகத் தெரிவித்து, அவரது பேண்டின் வலதுபுறப் பாக்கெட்டில் இருந்து அவரது பர்ஸில் இருந்த ரூ.1,320/- எடுத்து ஆஜர் செய்து, அதற்கு சரியான முகாந்திரம் கூறியதால் அப்பணம் அவரிடமே ஒப்படைத்தேன். அவரது அருகில் வடக்கு பக்கம் இருக்கையில் அமர்ந்திருந்த திரு.ஜெகதீஸ் என்பவரிடம் நான் விசாரித்த போது அவர் மேற்படி மணியன் அவர்களிடம் தொழிற்நுட்ப உதவியாளராக (Out Sourcing) பணிபுரிந்து வருவதாக தெரிவித்து, அவரது பேண்டின் இடதுபுற பாக்கெட்டில் இருந்து அவரது பர்ஸில் இருந்த ரூ.1,300/- எடுத்து ஆஜர் செய்தார். அப்பணத்தில் ரூ.300/-க்கு மட்டும் சரியான முகாந்திரம் கூறியதால் அப்பணம் அவரிடம் ஒப்படைத்தேன். அதுபோக அவரிடம் இருந்த பணம் ரூ.1,000/-க்கு (ரூ.500 X 1, ரூ.200 X 2, ரூ.100 X 1) சரியான முகாந்திரம் கூறாததால் அப்பணம் லஞ்சப்பணம் எனக் கருதி அப்பணத்தை நான் கைப்பற்றினேன். மேற்படி வரவேற்பு அறைக்கு வடக்கு பக்கம் உள்ள வரைவாளர் கேபின்

அறையில் போடப்பட்டிருந்த அலுவலக ஷோபா செட்டில் மேற்கு திசையை நோக்கி அமர்ந்திருந்த திரு.K. ராதா என்பவரிடம் நான் விசாரித்த பொழுது, அதற்கு அவர் தான் ஒப்பந்தகாரராக உள்ளதாகவும், தற்போது அவர் மதுரை மாநகராட்சி டெண்டர் எடுத்து, வறட்சி நிவாரண பணியின் கீழ் கடந்த 15 நாட்களாக மாநகராட்சி பகுதியில் போர்வெல் வேலைகள் செய்து வருவதாகவும், இன்று மேற்படி அலுவலகத்தில் உள்ள தலைமைப் பொறியாளர் திரு.ராமசாமி அவர்களிடம் நடந்த பணிகளைப் பற்றி கூறுவதற்காக வந்துள்ளதாகவும் தெரிவித்தார். அவரிடம் நான் பணம் பற்றி விசாரித்த போது, அவர் அவரது பேண்ட்டின் வலது பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.36,500/-யை ஆஜர் செய்தார். அப்பணம் பற்றி விசாரித்த போது, அதனை அவர் போர்வெல் வேலை செய்யும் ஆட்களுக்கான சம்பளம் மற்றும் போர்வெல் லாரி கட்டணத்திற்காக வைத்திருப்பதாக தெரிவித்து, மேலும் அப்பணத்தில் ரூ.1,500/-யை அவரது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். மேற்படி பணம் ரூ.35,000/- (ரூ.500 X 70) எப்படி அவருக்கு வந்தது என்பதற்கு அவரால் சரியான முகாந்திரம் கூற இயலாததால் அப்பணம் சந்தேகத்தின் அடிப்படையில் லஞ்சப்பணம் எனக் கருதி அப்பணத்தை நான் கைப்பற்றினேன். அதுபோல், அவரிடமிருந்த ரூ.1,500/- சரியான முகாந்திரம் அவர் தெரிவித்ததால் அப்பணம் அவரிடம் ஒப்படைத்தேன். அப்போது, அவருக்கு அருகில் இடது பக்கத்தில் அமர்ந்திருந்த திரு.கருப்பசாமி என்பவரிடம் நான் விசாரித்த போது, அவர் ஒப்பந்ததாரராக உள்ளதாகவும், மதுரை மாநகராட்சியில் டெண்டர் எடுத்து சுமார் மூன்று மாதத்திற்கு முன்பு பாத்ரூம் கட்டும் வேலை செய்து கொடுத்ததாகவும், அதற்குரிய பில்லில் ஒரு கையெழுத்து விடுபட்டு போனதால், அந்த பில்லில் விடுபட்ட கையெழுத்தினை இடுவதற்காக வந்ததாகத் தெரிவித்தார். நான், அவரிடம் பணம் பற்றி விசாரித்த போது, அவர் அவரது பேண்ட்டின் வலது பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.28,000/-யை ஆஜர் செய்தார். அப்பணம் பற்றி விசாரித்த போது, அதனை அவர் பணியாளர்களுக்கு சம்பளம் போடுவதற்காக ரூ.27,000/- வைத்துள்ளதாகவும், அது போக மீதியிருக்கும் ரூ.1,000/- அவரது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாகத் தெரிவித்தார். அவரால் மேற்படி பணம் ரூ.27,000/- (ரூ.500 X 54) எப்படி அவருக்கு வந்தது என்பதற்கு அவரால் சரியான முகாந்திரம் கூற இயலாததால் அப்பணம் சந்தேகத்தின் அடிப்படையில் லஞ்சப்பணம் எனக் கருதி அப்பணத்தை நான் கைப்பற்றினேன். அதுபோல், அவரிடமிருந்த ரூ.1,000/- சரியான முகாந்திரம் அவர் தெரிவித்ததால் அப்பணம் அவரிடம் ஒப்படைத்தேன். மேற்படி அலுவலகத்தின் நுழைவுவாயிலுக்கு இடது பக்கத்தில் மேற்கு பக்கத்தில் முதலாம் கேபின் அருகில் நின்று கொண்டிருந்த மேற்படி திரு. ரமேஷ் என்பவரிடம் நான் விசாரித்த போது, அவர் ஒப்பந்ததாரராக உள்ளதாகவும், அவர் கடந்த ஆறு மாதங்களாக ஆனையூர் மற்றும் வண்டியூர் பகுதிகளில் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் செய்து வருவதாகவும், இன்று மதியம் வள்ளுவர்

காலனியில் உள்ள கழிவு நீரேற்று நிலைய பிராதன குழாய் உடைந்து விட்டதால், அப்பகுதியின் உதவிப்பொறியாளர் திரு. கிருஷ்ணா அவர்கள் அதனை சரி செய்யும் படி கேட்டுக்கொண்டதால், அது சம்பந்தமாக தான் மேற்படி அலுவலகத்தில் உள்ள தலைமைப் பொறியாளர் திரு. ராமசாமி அவர்களை சந்தித்து, அது சம்பந்தமாகப் பேச வந்ததாகத் தெரிவித்தார். பின்னர் நான், அவரிடம் பணம் பற்றி விசாரித்த போது, அவர் அவரது பேண்ட்டின் வலது பாக்கெட்டில் மணி பர்ஸில் வைத்திருந்த பணம் ரூ.15,810/-யை ஆஜர் செய்தார். அப்பணம் பற்றி விசாரித்த போது, அதனை அவர் மேற்படி வேலைக்காக ரூ.13,000/- வைத்துள்ளதாகவும், அது போக மீதியுள்ள பணம் ரூ. 2,810/-யை தனது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். மேற்படி பணம் ரூ.13,000/-த்துக்கு (ரூ.500 X 26) அவரால் சரியான முகாந்திரம் கூற இயலவில்லை. அதன் காரணமாக அப்பணம் சந்தேகத்தின் அடிப்படையில் லஞ்சப்பணம் எனக் கருதி அப்பணத்தை நான் கைப்பற்றினேன். அதுபோல், அவரிடமிருந்த பணம் ரூ.2,810/-க்கு சரியான முகாந்திரம் அவர் தெரிவித்ததால் அப்பணம் அவரிடம் ஒப்படைத்தேன். மேற்படி அலுவலகத்தின் கிழக்கு பக்கத்தில் உள்ள மீட்டிங் ஹாலின் கதவு அருகில் சேரில் அமர்ந்திருந்த திரு.பாலமுருகன் என்பவரை நான் விசாரணை செய்த போது, அவர் மதுரை மாநகராட்சி மண்டலம் எண்.5-ல் உதவி செயற்பொறியாளர் பொறுப்புப் பணி செய்து கொண்டிருப்பதாகவும், தலைமைப் பொறியாளர் மேற்படி திரு. ராமசாமி அவர்களை ரோடு திட்டப்பணிகள் சம்பந்தப்பட்ட மதிப்பீட்டை கொடுப்பதற்காக மேற்படி அலுவலகத்திற்கு வந்ததாகத் தெரிவித்தார். நான், அவரிடம் பணம் பற்றி விசாரித்த போது, அவர் அவரது பேண்ட்டின் வலது பாக்கெட்டில் வைத்திருந்த பர்ஸிலிருந்து பணம் ரூ.11,000/- யை (ரூ.500 X 21, ரூ.200 X 2, ரூ.100 X 1) ஆஜர் செய்தார். அப்பணம் பற்றி விசாரித்த போது, அவர் அப்பணம் குறித்து சரியான முகாந்திரம் கூறாததால் அப்பணம் சந்தேகத்தின் அடிப்படையில் லஞ்சப்பணம் எனக் கருதி அப்பணத்தை நான் கைப்பற்றினேன். மேலும், அவரது சட்டையின் இடது புற மேல் பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.350/-யை எடுத்து ஆஜர் செய்து அதனை தனது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னார். அந்தப்பணம் குறித்து அவர் சரியான முகாந்திரம் அவர் தெரிவித்ததால் அப்பணம் ரூ.350/- அவரிடம் ஒப்படைத்தேன். மேலும், மேற்படி அலுவலகத்தின் நுழைவுவாயில் அருகில் நின்று கொண்டிருந்த திரு.M. கோகுலன் என்பவரை நான் விசாரணை செய்த போது, அவர் மதுரை மாநகராட்சி மண்டலம் எண்.2-ல் வார்டு எண்.31-ல் இளநிலை பொறியாளர் திரு.உமாபதி அவர்களிடம் தொழிற்நுட்ப உதவியாளராகப் பணி செய்து வருவதாகவும், அவர் மேற்படி உமாபதி அவர்களிடம் கையொப்பம் பெறுவதற்காகத் தலைமைப் பொறியாளர் மேற்படி திரு. ராமசாமி அவர்களின் அலுவலகத்திற்கு வந்ததாகத் தெரிவித்தார். அவரிடம் பணம் பற்றி விசாரித்த போது, அவர் அவரது பேண்ட்டின் வலது பாக்கெட்டில் மணி பர்ஸில் வைத்திருந்த

ரூ.3,100/-யை எடுத்து என்னிடம் ஆஜர் செய்தார். அப்பணம் பற்றி நான் விசாரித்த போது, அவர் அவரது தம்பியின் மருத்துவச் செலவுக்காக வைத்திருப்பதாகக் கூறி சரியான முகாந்திரம் கூறியதால் அப்பணம் அவரிடம் ஒப்படைத்தேன். மேலும், அவர் அவரது சட்டையின் இடது பக்க மேல் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.2,000/-த்தை (ரூ.500 X 4) ஆஜர் செய்தார். அது குறித்து சரியான முகாந்திரம் கூறாததால் அப்பணம் சந்தேகத்தின் அடிப்படையில் லஞ்சப்பணம் எனக் கருதி அப்பணத்தை நான் கைப்பற்றினேன். மேலும், மேற்படி அலுவலகத்தின் இரண்டாம் கேபினில் நின்று கொண்டிருந்த திரு.S. கார்த்திக் என்பவரை நான் விசாரணை செய்த போது, அவர் மதுரை மாநகராட்சி மண்டலம் எண்.2-ல் வார்டு எண்.15-ல் இளநிலை பொறியாளர் திரு. கண்ணன் அவர்களிடம் தேர்ச்சி திறனற்ற பணியாளராகப் பணி செய்து வருவதாகவும், அவர் மேற்படி அலுவலகத்திற்கு மண்டல கவுன்சிலர் நிதி மதிப்பீடு திருத்தம் சம்பந்தமாக வரைவாளர் வெங்கடேஷன் அவர்களை சந்திக்க வந்ததாகத் தெரிவித்தார். அவரிடம் பணம் பற்றி விசாரித்த போது, அவர் அவரது பேண்ட்டின் வலது பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.19,000/-யை (ரூ.500 X 31, ரூ.100 X 35) எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் பற்றி விசாரித்த போது, அப்பணம் அவர் புதிய குடிநீர் குழாய் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புக்காக மாநகராட்சிக்கு கட்ட வேண்டிய தொகை என்றும், அது பொது மக்களிடம் இருந்து பெறப்பட்ட பணம் என்றும் என்னிடம் தெரிவித்தார். ஆனால், அவர் அதற்கு சரியான முகாந்திரம் கூற இயலாததால் அப்பணம் சந்தேகத்தின் அடிப்படையில் லஞ்சப்பணம் எனக் கருதி அப்பணத்தை நான் கைப்பற்றினேன். மேலும், அவரது சட்டையின் இடது பக்க மேல் பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.400/-யை எடுத்து அவரது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக கூறி அதற்கு சரியான முகாந்திரம் கூறியதால் அப்பணம் அவரிடமே ஒப்படைத்தேன். மேலும், மேற்படி அலுவலகத்தின் மூன்றாம் கேபினில் நின்று கொண்டிருந்த திரு.C.செல்வகுமார் என்பவரை நான் விசாரணை செய்த போது, அவர் மதுரை மாநகராட்சி மண்டலம் எண்.2-ல் உதவி செயற்பொறியாளர் திரு.ஆரோக்கியசாமி அவர்களிடம் தொழில்நுட்ப உதவியாளராகப் (ஒப்பந்தப்பணியாளர்) பணி செய்து வருவதாகவும், அவர் மேற்படி அலுவலகத்திற்கு மேற்படி திரு. ஆரோக்கியசாமி அவர்கள் கூறியதின் பேரில், Street Food Hub @ Omni Bus Stand, Madurai Corporation File- ல் மேற்படி தலைமைப்பொறியாளர் திரு. ராமசாமி அவர்களின் Seal வைப்பதற்காக வந்ததாக என்னிடம் தெரிவித்தார். நான், அவரிடம் பணம் பற்றி விசாரித்த போது, அவர் அவரது பேண்ட்டின் வலது பாக்கெட்டில் மணி பர்ஸில் வைத்திருந்த ரூ.8,000/- மற்றும் ரூ.850/-யை எடுத்து என்னிடம் ஆஜர் செய்தார். அப்பணம் பற்றி நான் விசாரித்த போது, ரூ.8,000/- (ரூ.500 X 16) அவரது மகனின் மருத்துவச் செலவுக்காக வைத்திருப்பதாகக் கூறி அதற்கு சரியான முகாந்திரம் கூற

இயலாததால் அப்பணம் சந்தேகத்தின் அடிப்படையில் லஞ்சப்பணம் எனக் கருதி அப்பணத்தை நான் கைப்பற்றினேன். மேலும், அவரிடமிருந்த அவரது ரூ.850/-யை அவரது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக கூறி அதற்கு சரியான முகாந்திரம் கூறியதால் அப்பணம் அவரிடமே ஒப்படைத்தேன். மேலும், மேற்படி அலுவலகத்தின் நான்காம் கேபினில் நின்று கொண்டிருந்த திரு.M.வினோத்மணி என்பவரை நான் விசாரணை செய்த போது, அவர் மேற்படி மதுரை மாநகராட்சி தலைமைப்பொறியாளர் அலுவலத்தில் ஒப்பந்தப் பணியாளராகப் பணி செய்து வருவதாகத் தெரிவித்தார். அவரிடம் பணம் பற்றி விசாரித்த போது, அவர் அவரது பேண்ட்டின் வலது பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.7,000/- (ரூ.200 X 35) எடுத்து என்னிடம் ஆஜர் செய்தார். அப்பணம் பற்றி விசாரித்த போது, அதனை அவரது பூக்கடை சம்பந்தப்பட்ட கடனை அடைப்பதற்காக வைத்துள்ளதாக தெரிவித்து அதற்கு சரியான முகாந்திரம் கூற இயலாததால் அப்பணம் சந்தேகத்தின் அடிப்படையில் லஞ்சப்பணம் எனக் கருதி அப்பணத்தை நான் கைப்பற்றினேன். மேலும், அவரது சட்டைப்பையில் வைத்திருந்த அவரது ரூ.400/-யை அவரது சொந்தச் செலவிற்காக வைத்திருப்பதாக கூறி அதற்கு சரியான முகாந்திரம் கூறியதால் அப்பணம் அவரிடமே ஒப்படைத்தேன். மேலும், மேற்படி அலுவலகத்தின் தலைமைப்பொறியாளர் அறையின் வாசலில் வலதுபக்கம் மர சேரில் அமர்ந்திருந்த திரு.S.கணேஷ்பாண்டி என்பவரை நான் விசாரணை செய்த போது, அவர் மேற்படி மதுரை மாநகராட்சி தலைமைப்பொறியாளர் அலுவலத்தில் ஒப்பந்தப் பணியில் உதவியாளராகப் பணி செய்து வருவதாகவும், அதற்காக மாத சம்பளமாக ரூ.15,000/- பெற்று வருவதாகத் தெரிவித்தார். நான் அவரிடம் பணம் பற்றி விசாரித்த போது, அவர் அவரது சட்டைப்பையில் வைத்திருந்த அவரது ரூ.600/-யை அவரது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக கூறி அதற்கு சரியான முகாந்திரம் கூறியதால் அப்பணம் அவரிடமே ஒப்படைத்தேன். அவரது செல்போன் எண்.96294 55447-ன் G-Pay App-ல் உள்ள பணப்பரிவர்த்தனை குறித்து பார்வையிட்ட போது, கடந்த செப்டம்பர் 2025 முதல் 22.09.2026-ம் தேதி வரை ரூ.5,42,310/- வரவு வைக்கப்பட்டு இருந்தது. அப்பணப்பரிவர்த்தனை குறித்து நான், அவரிடம் கேட்ட போது, அவர் அவரது குடும்ப சூழ்நிலை காரணமாக செய்தித்தாள் பணியில் ஈடுபடுவதாகவும், அவரது சகோதரர் மற்றும் சகப் பணியாளர்கள் அவர்கள் வங்கி கணக்கு மூலமாக அவருக்கு G-Pay App-ல் பணம் அனுப்பியதாகத் தெரிவித்தார். தனியர் கூறிய விளக்கங்கள் சந்தேகத்துக்குரியதாக உள்ளன. பின்னர், இச்சோதனையின் போது அலுவலகத்தில் இருந்த (1) திரு.R.ராமசாமி, (2) திரு.V.S.மணியன், (3) திரு.M.பாலமுருகன், (4) திரு.K.மயிலேறிநாதன், (5) திரு.M.கோகுலன், (6) திரு.S.கார்த்திக், (7) திரு.C.செல்வகுமார், (8) திரு.M.வினோத்மணி, (9) திரு.S.ஜெகதீஸ், (10) திரு.கணேஷ்பாண்டி, (11) திரு.K.ராதா, (12) திரு.R.கருப்பசாமி, (13)

திரு.A.ரமேஷ் மற்றும் (14) திரு.K.ராஜாராம் ஆகியோரிடம் தனித்தனியே எழுத்துப்பூர்வமான வாக்குமூலங்களை பெற்றென். பின்னர் விசாரணைக்காக நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க தலைமைப் பொறியாளரின் நேர்முக உதவியாளர் திரு.V.S.மணியன் அவர்கள் (1) மதுரை மாநகராட்சி, தலைமை பொறியாளர் பிரிவு, வருகை பதிவேடு 2026 (பக்கம் எண் 1 முதல் 18 வரை), (2)பொது வருகை பதிவேடு (பக்கம் எண் 1 முதல் 2 வரை), (3) டெண்டர் ரிஜிஸ்டர் 2026-2027 (பக்கம் எண் 1 முதல் 47 வரை பயன்படுத்தப்பட்டது) ஆகிய ஆவணங்களை என்னிடம், சமர்ப்பித்தார். இச்சோதனையின் போது, அலுவலகத்திலிருந்த மேற்படி 11 நபர்களில் அரசு அலுவலர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் ஆகியோரிடமிருந்து சந்தேகத்ததின் அடிப்படையில் லஞ்சப்பணம் எனக் கருதி பணம் மொத்தம் ரூ.1,35,000/-ம் மற்றும் 3 அசல் அலுவலக பதிவேடுகளை கைப்பற்றினேன். இச்சோதனையின் போது அலுவலகத்தில் இருந்த ஆவணங்களுக்கோ, மற்ற பொருட்களுக்கோ, ஆவணங்களுக்கோ, உடைமைகளுக்கோ எவ்வித சேதமும் ஏற்படவில்லை. இந்த திடீர் இணை ஆய்வு குறிப்புரை 23.09.2026-ஆம் தேதி 00:30 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் இணை ஆய்வுக்குறிப்புரையின் நகல் ஒன்று மதுரை மாநகராட்சி தலைமைப் பொறியாளர் திரு.ராமசாமி அவர்களுக்கு வழங்கப்பட்டு, அதனை பெற்றுக்கொண்டமைக்காக அவரிடம் ஒப்பம் பெறப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வுக்குறிப்புரை, திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட தொகை மொத்தம் ரூ.1,35,000/- மேற்கண்ட அசல் பதிவேடுகள் - 3 மற்றும் மேற்கண்ட 14 நபர்களுடைய வாக்குமூலங்கள் ஆகியவற்றை இணைத்துள்ளேன். மேற்படி மதுரை மாநகராட்சி தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வின் போது மேற்படி அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் வாக்குமூலங்களின் படி மேற்படி அலுவலகத்திற்கு எவ்வித முகாந்திரமுமின்றி பணத்துடன் இருந்ததற்கும், மேற்படி பணத்திற்கும் தகுந்த முகாந்திரமும் தெரிவிக்காததாலும், ஒப்பந்ததாரர்களைத் தக்க ஆவணங்களின்றி அலுவலகத்திற்கு அனுமதித்துடன் பணபரிவர்த்தனை அலுவலகத்திற்கு மேற்கொள்ளக் கூடாது என்றும் முறையாக ஆன்லைன் மூலமாக மட்டும் மேற்கொள்ள வேண்டும் என்ற அரசு விதிமுறைகளை மீறி தங்களது சுய லாபத்திற்கு பணப்பலன் பெற இருந்தமைக்கும், கணக்கில் வராத பணம் வைத்திருந்த நபர்கள் மற்றும் அவர்களை அனுமதித்த உயர்அதிகாரிகளான (1) திரு. R.ராமசாமி, (2) திரு.V.S.மணியன், (3) திரு.M.பாலமுருகன், (4) திரு.K.மயிலேறிநாதன், (5) திரு.M.கோகுலன், (6) திரு.S.கார்த்திக், (7) திரு.C.செல்வகுமார், (8)திரு.M.வினோத்மணி, (9) திரு.S.ஜெகதீஸ், (10) திரு.கணேஷ்பாண்டி, (11) திரு.K.ராதா, (12) திரு.R.கருப்பசாமி, (13) திரு.A.ரமேஷ் மற்றும் (14) திரு.K.ராஜாராம் ஆகியோர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டி தங்களிடம் இந்த அறிக்கையை அளிக்கிறேன். ஒம்/-XXXXXX 23.09.26 (C. சுந்தரமுருகன்)

துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், மதுரை மாவட்டம். இணைப்பு : 1) திடீர் இணை ஆய்வு குறிப்புரை, நாள் : 23.09.2026. 2) கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.1,35,000/-. 3) மதுரை மாநகராட்சி தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட அசல் பதிவேடுகள் - மூன்று (3). 4)மதுரை மாநகராட்சி தலைமைப் பொறியாளர் அலுவலகத்திலிருந்த மேற்படி 14 நபர்களிடம் பதிவு செய்யப்பட்ட எழுத்துப்பூர்வமான வாக்குமூலங்கள்.

Sir, Received this report today (23.09.2026) at 15:30 hrs along with Joint Surprise Check Proceedings, dated 23.09.2026, Cash Rs.1,35,000/-, 14 statements and Three Seized Registers. After obtaining permission from the Superior Officers, I registered a case in Madurai V&AC Crime No.14/2026 u/s 7, 7A of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 and 106 BNSS Act on 23.09.2026 at 16:15 hrs. Sd/- XXXXX 23/09/2026 (T. Suriyakala) Inspector, V&AC, Madurai.

The original FIR along with report dated : 23.09.2026 of Tr. C. Sundramurugan, Deputy Inspection Cell Officer, Joint Surprise Check Proceedings Dated :23.09.2026, Statements of officials (10), Statements of Contractors (4) are submitted to the Hon'ble Special Judge, Special Court for trial of cases under the Prevention of Corruption Act, Madurai and other copies were sent to the officers concerned.

(T. SURIYAKALA),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Madurai
(23.09.2026)